# தேச பக்தி
DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:137 ★17.09.2026 ★தமிழ் நாளிதழ் ★வியாழக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:137 ★17.09.2026 ★TamilDaily ★Thursday ★Page-4 ★Price-₹5/- Chennai




## கிராமப்புற அரசு பள்ளிகளில் ICT மூலம் கல்வி நிர்வாகத்தில் புதிய மாற்றம் - ஓய்வுபெற்ற வட்டாரக் கல்வி அலுவலர் ஜி. குணசேகரனுக்கு NIEPA தேசிய விருது

திருவண்ணாமலை, செப்.17

கிராமப்புற அரசு பள்ளிகளில் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தை (ICT) திறம்பட பயன்படுத்தி கல்வி நிர்வாகத்தில் புதுமையான நடைமுறைகளை செயல்படுத்தியதற்காக, திருவண்ணாமலை மாவட்டத்தில் வட்டாரக் கல்வி அலுவலராக பணியாற்றிஓய்வுபெற்ற ஜி. குணசேகரனுக்கு புதுடெல்லியில் உள்ள தேசிய கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாக நிறுவனம் (NIEPA) சார்பில் தேசிய விருது வழங்கப்பட்டது.

202324 மற்றும் 2024 25ஆம் ஆண்டுகளுக்கானகல்விநிர்வாகத்தில் புதுமைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கான தேசிய விருது நிகழ்ச்சியில் இந்த விருதுவழங்கப்பட்டது.

குறிப்பாக, ஜி. குணசேகரன் பெரணமல்லூர் வட்டாரக் கல்வி அலுவலராக பணியாற்றிய காலத்தில் கிராமப்புற அரசு பள்ளிகளில் ICT தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மேற்கொண்ட கல்வி நிர்வாகப் பணிகள் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்டு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு நாட்கள் நடைபெற்ற தேசிய அளவிலான நிகழ்ச்சியின் தொடக்கவிழா செப்டம்பர் 2ஆம் தேதி புதுடெல்லியில் உள்ள NIEPA ACADEMIC BUILDING AUDITORIUMல் நடைபெற்றது.

விழாவில் மாநிலங்களவை உறுப்பினரும், பாரதிய ஜனதா கட்சியின் தேசிய பொதுச்செயலாளருமான வினோத் ஸ்ரீதர்தாவ்டே தலைமை விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

NIEPA CHANCELLOR பேராசிரியர் ராமா சங்கர் துபே தலைமையில் நடைபெற்ற தொடக்க விழாவில், PROGRAMME DIRECTOR & HEAD, DEA பேராசிரியர் வினீதா சிரோஹி, NIEPA VICECHANCELLOR பேராசிரியர் சஷிகலா வஞ்சாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதைத்தொடர்ந்து, செப்டம்பர் 3ஆம் தேதி நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், முன்னாள் NCERT இயக்குநரும் பத்மஸ்ரீ விருது பெற்றவருமான பேராசிரியர் ஜே. எஸ். ராஜ்புத் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு தேர்வு செய்யப்பட்ட கல்வி அலுவலர்களுக்கு தேசிய விருதுகளை வழங்கினார். விழாவுக்கு NIEPA CHANCELLOR பேராசிரியர் ராமா சங்கர் துபே தலைமை வகித்தார்.

ஜி. குணசேகரன் பெரணமல்லூர் வட்டாரக் கல்வி அலுவலராக பணியாற்றியபோது செயல்படுத்தப்பட்ட ICT சார்ந்த முயற்சியின் மூலம், கிராமப்புற அரசு பள்ளிகளில் மாணவர்களின் வருகை, வகுப்பு செயல்பாடுகள், கற்றல் அமர்வுகள், பாடநெறி நிறைவு உள்ளிட்ட பல்வேறு கல்வி சார்ந்த தகவல்கள் டிஜிட்டல் முறையில் பதிவு செய்யப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டன.

GOOGLE SHEETS, MONITORING APPS, ICT DASHBOARDS, WHATSAPP குழுக்கள், காணொலி அழைப்புகள் உள்ளிட்ட தொழில்நுட்பக் கருவிகள் மூலம் பள்ளிகளின் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டன. இதன் மூலம் கல்வி அலுவலர்கள் தரவுகளின் அடிப்படையில் பள்ளிகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, தேவையான வழிகாட்டுதல்களை உடனடியாக வழங்கும் நடைமுறை உருவாக்கப்பட்டது.

மேலும், டிஜிட்டல் வகுப்பறைகள் வாயிலாக ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன கற்றல் வாய்ப்புகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

இதன் மூலம் மாணவர்களின் கற்றல் ஆர்வத்துடன், ஆசிரியர்களின் டிஜிட்டல் திறனையும் மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த முயற்சியில் வட்டாரக் கல்வி அலுவலகம், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், ICT பணியாளர்கள், கள ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தொழில்நுட்பக் குழுவினரின் ஒருங்கிணைந்த பங்களிப்பு முக்கிய பங்கு வகித்தது. குறிப்பாக, SWADD NGO கள ஒருங்கிணைப்பாளர் யுவராஜ், பள்ளிகளுடனான கள ஒருங்கிணைப்பு, தொழில்நுட்ப செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் ஆசிரியர்களுக்குதேவையான ஆதரவை வழங்குதல் உள்ளிட்ட பணிகளில் பங்களித்தார். EVIDYALOKA குழுவினர் தொழில்நுட்ப ஆதரவு மற்றும் பயிற்சிகளை வழங்கினர்.

இந்த நிலையில், தேசிய விருது பெற்ற ஜி. குணசேகரன், அந்த விருதை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்கிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

பெரணமல்லூர் வட்டாரக் கல்வி அலுவலராக பணியாற்றிய காலத்தில் மேற்கொண்ட கல்வி நிர்வாகப் பணிகளுக்காக தேசிய அளவில் கிடைத்த அங்கீகாரம் குறித்து மாவட்ட ஆட்சியர் அவருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

கிராமப்புற அரசு பள்ளிகளிலும் தொழில்நுட்பத்தை திறம்பட பயன்படுத்தி, கல்வி நிர்வாகத்தை தரவுகளின் அடிப்படையில் நவீனப்படுத்த முடியும் என்பதை இந்த முயற்சி எடுத்துக்காட்டியுள்ளது. ஜி. குணசேகரனுக்கு கிடைத்துள்ள NIEPA தேசிய விருது, திருவண்ணாமலை மாவட்டத்தில் கிராமப்புற அரசு பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும்தொழில்நுட்ப அடிப்படையிலான கல்வி நிர்வாக முயற்சிகளுக்கு கிடைத்துள்ள தேசிய அங்கீகாரமாக அமைந்துள்ளது.

# 'டேப்ஸ்' இடைக்கால நிவாரணம் ரூ.10 ஆயிரமாக நிர்ணயம்: அரசு ஊழியர்ஆசிரியர் சங்கங்கள் கடும் எதிர்ப்பு

தமிழக அரசுப்பணியில் 10 முதல் 18 ஆண்டுகள்வரை பணியாற்றி ஓய்வுபெற்றவர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தில் (டேப்ஸ்) இடைக்கால நிவாரணத் தொகை ரூ.10 ஆயிரம் மற்றும் அதற்குரிய டிஏ என நிர்ணயிக்கப்பட்டிருப்பதற்கு அரசு ஊழியர் ஆசிரியர் சங்கங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

கடந்த ஜன.1க்குப் பிறகு ஓய்வுபெற்றவர்களுக்கு டேப்ஸ் இடைக்கால நிவாரணத்தொகை கணக்கிடுவது தொடர்பாக அரசின் நிதி அமைச்சகத்தின் செலவினத் துறை செயலர் என்.வெங்கடேஷ் கருவூல கணக்குத்துறை இயக்குநருக்கு கடந்த 11ம் தேதி ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக்கடிதத்தில்அவர் கூறியிருப்பதாவது: 10 ஆண்டுகளுக்கு மேலும் 18 ஆண்டுகளுக்குள்ளும் பணியாற்றி ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தில்(டேப்ஸ்)இடைக்கால நிவாரணத்தொகையாக ரூ.10 ஆயிரம் மற்றும் அதற்குரிய அகவிலைப்படி (டிஏ) வழங்கப்படும்.

டேப்ஸ் விதிகள் மற்றும் நடைமுறைகள் அறிவிக்கப்பட்ட பிறகு தகுதியான பணிக்காலத்தின் அடிப்படையில் ஒவ்வொரு ஊழியருக்கும் அனுமதிக்கத்தக்க தொகை கணக்கிடப்பட்டு அதில் வரும் வித்தியாசம் நிலுவைத்தொகையாக வழங்கப்படும்.

18 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்ட காலம் பணியாற்றி ஓய்வுபெற்றோருக்கு அவர்கள் கடைசியாக பெற்ற அடிப்படை ஊதியத்தில் 30 சதவீதம் அல்லது ரூ.10 ஆயிரம், இதில் எது அதிகமோ அந்த தொகை, அதற்குரிய அகவிலைப் படியுடன் சேர்த்து இடைக்கால நிவாரணத்தொகையாக வழங்கப்படும்.

அதேநேரத்தில் 18 ஆண்டுகளுக்கு குறைவாக பணியாற்றியவர்களுக்கு கடைசியாக பெற்ற அடிப்படை ஊதியத்தில் 30 சதவீதம் என்ற அளவில்டேப்ஸ்இடைக்கால நிவாரணத்தொகை அனுமதிக்கப்பட்டிருந்தால், அகவிலைப் படி உள்பட வழங்கப்பட்ட கூடுதல் தொகையானது செப்டம்பர் முதல் இடைக்கால நிவாரணத்தொகையில் இருந்து 10 தவணைகளில் பிடித்தம் செய்யப்படும்.இவ்வாறு கூறியுள்ளார்.



டேப்ஸ் இடைக்கால நிவாரணத் தொகைக்கு குறைந்தபட்ச பணிக்காலம் 18 ஆண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டிருப்பதற்கு அரசு ஊழியர், ஆசிரியர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழக பொதுச்செயலர் சோ.சுரேஷ் வெளியிட்ட அறிக்கை: அனைவருக்கும் இடைக்கால அடிப்படை ஓய்வூதியமாக ரூ.10,000 என வரையறுத்திருப்பது அபத்தம். தமிழக அரசு உடனடியாக டேப்ஸ் திட்ட முழு விதிகளையும் வெளியிட வேண்டும்.

கடந்த 11ம் தேதி நிதித்துறை வெளியிட்ட கடிதத்தை திரும்பப்பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

சிபிஎஸ் ஒழிப்பு இயக்க மாநில தலைமை ஒருங்கிணைப்பாளர்கள் சு. ஜெய ராஜராஜேஸ்வரன், பி.பிரெடெரிக் எங்கெல்ஸ், மு.செல்வக்குமார் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை: தவெக அரசு, அரசாணை எண் 111 மூலம் டேப்ஸ் திட்டத்துக்கான வழிகாட்டும் நெறிமுறைகள் வெளியிடப்படும் வரை, இடைக்கால பணப்பலன் வழங்கும் நடைமுறை அமல்படுத்தப்படும் என்று அறிவித்தது. கடைசி மாத ஊதியத்தில் 30 சதவீதமும், அதற்குரிய அகவிலைப்படியும் வழங்கப்படும் என அறிவித்தது.

இந்நிலையில், நிதித்துறை வெளியிட்டுள்ள கடிதத்தில் குறைந்தபட்ச பணிக்காலம் 18 ஆண்டுகள் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் அதற்கு குறைவாக பணிபுரிந்து, 30 சதவீதம் இடைக்கால பணப்பெற்ற ஓய்வூதியரிடமிருந்து கூடுதலாக வழங்கப்பட்ட ஓய்வூதியத் தொகையை பிடித்தம் செய்ய வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருப்பது மனிதநேய மற்ற செயல். தவெக அரசின் இச்செயல் அரசு ஊழியர், ஆசிரியர் மத்தியில் கடுமையான அதிர்ச்சியை உருவாக்கி உள்ளது.

### பெற்றோர் கைகளில் தொடங்கிய பொறியியல் கனவு:

# எஸ்கேபி கல்லூரியில் 400க்கும் மேற்பட்ட அரசுப்பள்ளி மாணவர்களுக்கு புதிய கல்விப் பயணம்

திருவண்ணாமலை, செப். 17

திருவண்ணாமலை எஸ்கேபி பொறியியல் கல்லூரியில் 2026–2027ஆம் கல்வியாண்டுக்கான முதலாம் ஆண்டு வகுப்புகள் தொடக்க விழா நடைபெற்றது. புதிய மாணவர்களின்கல்விப்பயணத்தை உணர்வுபூர்வமாக தொடங்கும் வகையில், கல்லூரியில் முதன்முறையாக வழங்கப்பட்ட அடையாள அட்டைகளை மாணவர்களின் பெற்றோர்களே தங்கள் பிள்ளைகளுக்கு அணிவித்து வாழ்த்திய நிகழ்வு அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. விழாவுக்கு எஸ்கேபி கல்விக்குழுமத் தலைவர் கு. கருணாநிதி தலைமை தாங்கினார். தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் ரா. சக்தி கிருஷ்ணன் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர்டாக்டர்சு. பாஸ்கரன் வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக எழுத்தாளர், நடிகர், கதை சொல்லி பவா. செல்வதுரை கலந்து கொண்டு மாணவர்களிடையே உரையாற்றினார்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கல்லூரி அடையாள அட்டையை அணிவித்து ஆசீர்வதித்த தருணம், மாணவர்களின் உயர்கல்விப் பயணத்தின் முதல் நினைவாக அமைந்தது. தங்கள் பிள்ளைகள் பொறியியல் கல்வியில் அடியெடுத்து வைப்பதை பெருமையுடன் கண்ட பெற்றோர்கள், நல்ல கல்வியுடன் ஒழுக்கத்தையும் வளர்க்க வேண்டும் என வாழ்த்தினர்.




எஸ்கேபி கல்விக்குழுமத் தலைவர் கு. கருணாநிதி பேசுகையில், தானும் பொறியியல் கல்வி பயின்ற அனுபவத்தின் அடிப்படையில், திருவண்ணாமலை மாணவர்கள் தரமான பொறியியல் கல்விக்காக வெளியூர் செல்ல வேண்டிய நிலை ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தில் கல்லூரியை தொடங்கியதாக தெரிவித்தார்.

1999ஆம் ஆண்டு கல்லூரி தொடங்கப்பட்டபோது தமக்கு 28 வயது என்றும், அப்போது சேர்ந்த மாணவர்களுக்கும் தமக்கும் பெரிய வயது வித்தியாசம் இல்லாததால் மாணவர்களுடன் நெருக்கமாக பழகி அவர்களின் தேவைகளை அறிந்து கல்லூரியின் செயல்பாடுகளை மேம்படுத்தியதாகவும் கூறினார். 27 ஆண்டுகளை நிறைவு செய்து 28ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நிலையில், கல்லூரியின் நோக்கம் கட்டிடங்களை உருவாக்குவது மட்டுமல்ல; நல்ல தலைமுறையை உருவாக்குவதே உண்மையான கல்விப் பணி என்றார். கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் முன்னணி நிறுவனங்களில் பணியாற்றி வருவதாகவும், பல்வேறு நாடுகளுக்குச் செல்லும்போது முன்னாள் மாணவர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். மாணவர்கள் மதிப்பெண்களுடன் ஒழுக்கம், நேர்மை, கடினஉழைப்பு, தன்னம்பிக்கை மற்றும் மனிதநேயம் ஆகிய பண்புகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் ரா. சக்தி கிருஷ்ணன் பேசுகையில், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப பொறியியல் துறையிலும் வேலை வாய்ப்புகளின் தன்மை தொடர்ந்து மாறி வருவதாகவும், மாணவர்கள் பாட அறிவுடன்நவீன தொழில்நுட்பத் திறன்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை கல்லூரியின் பொறுப்பில் ஒப்படைத்துள்ள நிலையில், அந்த நம்பிக்கையை மாணவர்கள் காப்பாற்றும் வகையில் நல்ல மதிப்பெண்களுடன் திறன்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

பவா. செல்வதுரை பேசுகையில், கல்வி என்பது பாடங்களைப் படிப்பது மட்டுமல்ல; ஆசிரியர்கள், நண்பர்கள், சமூக அனுபவங்கள், ஒழுக்கம் உள்ளிட்ட அனைத்தும் ஒருவரின் கல்விப் பயணத்தின் ஒரு பகுதியாகும் என்றார். தானும் கு. கருணாநிதியும் அரசு தொடக்கப்பள்ளியில் கல்வியைத் தொடங்கியவர்கள் என்றும், பணம் மட்டுமே ஒருவருக்கு முழுமையான கல்வியை வழங்கிவிடாது என்றும் குறிப்பிட்டார். மாணவர்கள் அதிக மதிப்பெண்களைப் பெறுவதுடன் நல்ல மனிதர்களாக உருவாக வேண்டும் என வலியுறுத்திய அவர், வாசிப்பு பழக்கத்தின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். நல்ல நூல்கள் அறிவையும் சிந்தனையையும் விரிவுபடுத்தும் என்றும், இலக்கியம், வாழ்க்கை வரலாறுகள்மற்றும்சிந்தனையைத் தூண்டும் நூல்களை மாணவர்கள் தொடர்ந்து படிக்க வேண்டும் என்றும் கூறினார்.

இந்த கல்வியாண்டில் மட்டும் 400க்கும் மேற்பட்ட அரசுப்பள்ளி மாணவர்கள் எஸ்கேபி பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு பொறியியல் கல்வியில் சேர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

விழாவில் எஸ்கேபி கலைக்கல்லூரி முதல்வர் டாக்டர் முருகன், கல்லூரி மக்கள் தொடர்பு அலுவலர் சையத் ஜஹீருதீன், துறைத் தலைவர்கள் டாக்டர் குபேரன், டாக்டர் புருஷோத்தமன், டாக்டர் ஸ்ரீதேவி, டாக்டர் ராஜி, டாக்டர் அர்ச்சனா, டாக்டர் பிரதீப் பழனி, பேராசிரியர்கள் பிரியங்கா, ஸ்வாதி உள்ளிட்ட பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். முதலாம் ஆண்டு துறைத் தலைவர் தனசேகரன் நன்றி கூறினார்.

"சின்னமனூர் நகராட்சியில் தெருநாய் கருத்தடை முகாம் தீவிரம்"

# சுகாதார ஆய்வாளர் வேல்முருகன் தலைமையில் தூய்மைப் பணியாளர்கள் அதிரடி

தேனி,செப்.17

தேனி மாவட்டம், சின்னமனூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தெருநாய் தொல்லையை கட்டுப்படுத்தவும், வெறிநாய் கடி நோயை தடுக்கவும் நகராட்சி நிர்வாகம் சார்பில் சிறப்பு விலங்கு பிறப்பு கட்டுப்பாடு (ABC) மற்றும் தடுப்பூசி முகாம் தீவிரமாக நடத்தப்பட்டு வருகிறது.தமிழக அரசின் நகராட்சி நிர்வாக இயக்கத்தின் (DMA) வழிகாட்டுதலின்படி, ஒவ்வொரு மையத்திலும் தினமும் குறைந்தபட்சம் 10 நாய்களுக்குகருத்தடைஅறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த இலக்கின்படி, சின்னமன்னூர் நகராட்சி சுகாதார ஆய்வாளர் (S.I.) திரு. வேல்முருகன் அவர்கள் தலைமையில், நகராட்சி தூய்மைப் பணியாளர்களின் முழு ஈடுபாட்டுடன் தினந்தோறும் 10 தெரு நாய்கள் வீதம் பிடிக்கப்பட்டு, அவற்றுக்குமுறைப்படிஅறுவை சிகிச்சை செய்யப்பட்டு, வெறிநாய் கடி தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டு வருகின்றன.






இது குறித்து சுகாதார ஆய்வாளர் வேல்முருகன் பொதுமக்களுக்கு விடுத்துள்ள அறிவுறுத்தலின்படி, "நகராட்சி பகுதிகளில் தெருநாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்தவும், நோய்கள்பரவாமல்தடுக்கவும்தீவிரநடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களும் தங்கள் வீட்டில் வளர்க்கும் நாய்களை நகராட்சியில் முறைப்படி தகவல் தெரிவித்து பதிவு செய்ய வேண்டும். மேலும், வளர்ப்பு நாய்களுக்கும் தவறாமல் கால முறை தடுப்பூசிகளை செலுத்தி பராமரிக்க வேண்டும்," எனத் தெரிவித்துள்ளார். நகராட்சி தூய்மைப் பணியாளர்களின் தீவிர முயற்சியால் நடைபெற்று வரும் இந்தநடவடிக்கைக்குசின்னமன்னூர் பகுதி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.






இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப.. தலைமையில் ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்தில் "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்ட முகாமில் ஆற்காடு வட்டத்திற்குட்பட்ட அனைத்து கிராமப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகள் தொடர்பாக அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ந.சரவணன். திட்ட இயக்குனர் ஊரக வளர்ச்சி முகமை ச. செல்வராணி.சமூகபாதுகாப்புதிட்டம்தனிதுணைஆட்சியர்கீதாலட்சுமி,வருவாய் கோட்டாட்சியர் ராஜி மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் உள்ளனர்.

# பாடியநல்லூர் பாலாஜி நகர் நண்பர்கள் குழு சார்பில் நலத்திட்ட உதவிகள்





செங்குன்றம், செப்டம்பர் 17:

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் பாலாஜி நகர் தாண்டவம் பாய்ஸ் சார்பில் அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் 11ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா மன்ற நிர்வாகிகள் எம்.தனசேகர், வி.மணிகண்டன், கே.வடிவேல், கே.சிவா, எஸ்.அருண், ஆர்.பாபு, பி.சரத்குமார், மன்ற உறுப்பினர்கள் ஆர்.ராம், ஆர்.சந்தோஷ், எம்.விக்னேஷ், ஆர்.சஞ்சய், எஸ். திலிப்குமார், பி.ராம் ஆகியோர் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது. தமிழக வெற்றிக் கழகம் திருவள்ளூர் தென் மேற்கு மாவட்டப் பொருளாளர் டிசிஎம். மனோஜ் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டு கேக் வெட்டி, சிறப்பு பூஜைகளை தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளான குடை, ரெயின்கோட் மற்றும் அறுசுவை அன்னதானத்தை வழங்கினார். இந்நிகழ்வில் தவெக நிர்வாகிகள் உறுப்பினர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



IIT, IIM, NIT உள்ளிட்ட மத்திய கல்வி நிறுவனங்களில் பயிலும்

# BC, MBC, DNC மாணவர்களுக்கு ரூ.2 லட்சம் வரை கல்வி உதவித்தொகை

## மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு

திருவண்ணாமலை, செப்.17

திருவண்ணாமலை மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த (BC/MBC/DNC) மாணவர்கள் 2026–2027ம் கல்வி யாண்டிற்கான புதிய மற்றும் புதுப்பித்தல் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் உள்ள IIT, IIM, IIIT, NIT மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் BC/MBC/DNC மாணவர்களுக்கு இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற, மாணவர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.50 லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். தகுதியுடைய மாணவர்களுக்கு கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் இதர கட்டாயக்கட்டணங்கள்அல்லது ஆண்டுக்கு அதிகபட்சமாக ரூ.2 லட்சம் வரை கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

கல்வி உதவித்தொகைக்கான விண்ணப்பங்களை பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், சென்னை–5, மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலஇயக்ககம், சென்னை–5, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர்அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலும், www.bcw.tn.gov.in என்ற இணையதளத்திலும் விண்ணப்பம் தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

மத்திய அல்லது மாநில அரசின் பிற கல்வி உதவித்தொகைத் திட்டங்களின் கீழ் ஏற்கனவே பயன்பெறும் மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை பெற தகுதியற்றவர்கள். விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட கல்விநிறுவனத்தில்சமர்ப்பிக்க வேண்டும். கல்வி நிறுவனம் மாணவரின் உறுதிச் சான்றிதழுடன் (Bonafide Certificate) விண்ணப்பத்தைப் பரிந்துரை செய்து சம்பந்தப்பட்ட நலத்துறைக்கு அனுப்ப வேண்டும்.

புதுப்பித்தல் (Renewal) விண்ணப்பங்கள் 31.10.2026க்குள்ளும், புதிய (Fresh) விண்ணப்பங்கள் 30.11.2026க்குள்ளும் அனுப்பப்பட வேண்டும். மேலும், Even Semester கட்டண ரசீதுகள் 15.01.2027க்குள் அனுப்பப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

# இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் நாளது தேதி வரையிலும் நியாயவிலைக்கடைகளில் eKYC (கைரேகை) மேற்கொள்ளாதவர்கள் அனைத்து நியாயவிலைக்கடைகளில் இன்று முதல் அனைவரும் தங்களுக்கு அருகில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்குச் சென்று கைவிரல் ரேகையினை பதிவு செய்வது அவசியம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன் அறிக்கை

தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் சுய உதவிக் குழுக்கள் மூலம் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வரும் குடும்ப அட்டை பயனாளிகள் அனைவரும் தங்களது குடும்ப அட்டையில் உள்ள அனைத்து உறுப்பினர்களின் eKYC (கைரேகை பதிவு) தற்போது தீவிரமாக பதிவுசெய்யப்பட்டு வருகின்றன.

தேசிய உணவுப்பாதுகாப்புச்சட்டம்,2013ன்படி முன்னுரிமை மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா குடும்ப அட்டைகளின் ஆதார் விவரங்களை சரிபார்ப்பதற்காக மின்னணு குடும்ப அட்டையில் இணைக்கப்பட்ட அனைத்து பயனாளிகளின் விரல் ரேகை அடிப்படையிலான சரிபார்ப்பினை (eKYC) மேற்கொள்ள வேண்டும் என மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

அதன் படி குடும்ப உறுப்பினர்களுக்கு ஏதும் இடையூறுமின்றி இப்பணியினை செய்திட அறிவுறுத்தப்பட்டு கடந்த அக்டோபர் 2023 முதல் குடும்ப உறுப்பினர்களின் விரல் ரேகை சரிபார்ப்பு (eKYC) பணி நடைபெற்று வருகிறது.

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தியவாறு eKYC பதிவினை 100% நிறைவு செய்யும் பொருட்டு அனைத்து நியாயவிலைக்கடைகளிலும் பொதுமக்கள் அனைவரும் அருகில் உள்ள நியாயவிலைகடைகளுக்கு சென்று தங்களது eKYC (கைரேகை) பதிவினை மேற்கொள்ளுமாறும், குடும்ப அட்டையில் உள்ள இறந்த உறுப்பினர்களின் பெயர்களை நீக்கம் செய்திட உரிய இறப்பு சான்று நகல் மற்றும் ஆதார் நகல் ஆகியவற்றை இசேவை மையங்களில் பதிவு செய்து நீக்கம் செய்யுமாறும் மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீ சக்தி கணபதி ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி விழா

செங்குன்றம், செப்டம்பர் 17:

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் கிராண்ட்லையன் ஊராட்சி கரிகாலன் சோழன் சாலை விஜய் நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சக்தி கணபதி ஆலயத்தில் 2ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா ஆலய நிர்வாக குழுவினர்கள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி ஹோமத்துடன் சுவாமிக்கு மஞ்சள், குங்குமம், பால், தயிர், இளநீர், சந்தனம், பன்னீர், தேன் உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து பின்னர் வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்து மஹா தீபாராதனை காண்பிக்க ப்பட்டது.





இவ்விழாவில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.

மேலும் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர். முடிவில் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது.

# புள்ளிலையன் ஸ்ரீ ஐஸ்வர்ய விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி விழா

செங்குன்றம், செப்டம்பர் 17:

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் புள்ளிலையன் ஊராட்சி சி.ஆர்.பி.நகர் மற்றும் பாரதி நகரில் பக்தர்களுக்கு அருள்பாலித்து கொண்டு இருக்கும் ஸ்ரீ ஐஸ்வர்ய விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி விழா ஆலய தலைவர் சேகர், துணைத்தலைவர் பாண்டியன், செயலாளர் அன்பழகன், துணை செயலாளர் கணேசன், பொருளாளர்பார்த்தசாரதி மற்றும்சி.ஆர். பி.நகர், பாரதி நகர் குடியிருப்பு மக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சுவாமிக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து சந்தனகாப்பு மற்றும் வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது.





இதில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். இதனைத்தொடர்ந்து பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர். முடிவில் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது.

# மாதவரம் பிடாரி செல்லியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் விழா

செங்குன்றம், செப்டம்பர் 17:





தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறைக்கு உட்பட்ட மாதவரம் அருள்மிகுபிடாரிசெல்லியம்மன் ஆலயத்தில் புணராவர்த்தன ஜீர்ணோத்தாரன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா ஆலய தலைவர் சேகர், செயலாளர் பெருமாள், பொருளாளர் பாஸ்கர் மற்றும் நிர்வாகிகள் சுப்பிரமணி, வெங்கடேசன், ரகு, ரவி, மாரியப்பன், வீரன், சுரேஷ், சிவா, மணி, ஏழுமலை, சங்கர் மேஸ்திரி, விஜி, பழனி, கர்ணா, ராஜவேல், விஜி உட்பட்ட இந்து சமய அறநிலையத்துறை மேலாளர் கார்த்திக் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் விக்னேஷ்வர பூஜை, கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், நவக்கிரகம் ஹோமம், வாஸ்துசாந்தி, மிருத்சங்கிர ஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், பூர்ணாஹீதி, மூலமந்திர ஹோமம், முதல் இரண்டுகால யாகசாலை பூஜைகள், தாய்வீட்டு சீதனம் சீர்வரிசை எடுத்துவருதல் மற்றும் பல்வேறு சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் போன்றவைகள் நடைபெற்றது.

பின்னர் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை மேளதாளத்துடன் கொண்டு சென்று ஆலய விமானம் மற்றும் மூலவர் உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காண்பித்து பின்னர் பக்தர்கள் மீது புனிதநீரை தெளித்தனர். இதனைத் தொடர்ந்து மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு அலங்காரம் செய்து துபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இவ்விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள், ஆன்மீக சேவகர்கள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.




பழனி நகராட்சியின் 33 வார்டுகளிலும் நான்கு வகையாக குப்பைகளை பிரித்து வழங்க பொதுமக்களுக்கும் குடியிருப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டு அதன் தொடர்ச்சியாக பொதுமக்களால் பிரித்து வழங்கும் பிளாஸ்டிக் கழிவுகளை நகராட்சி பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்பட்டு நகராட்சியின் உலர் கழிவு சேகரிப்பு மையத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள விற்பனை செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகளை எரிபொருள் பயன்பாட்டிற்காக சிமெண்ட் ஆலைகளுக்கு நகராட்சி ஆணையர் ராஜலட்சுமி அவர்களின் அறிவுரைப்படி அனுப்பி வைக்கப்பட்டது

# வாலாஜாபேட்டையில் இந்து மக்கள் கட்சியின் சார்பில் விநாயகர் ஊர்வலம்

வாலாஜாபேட்டை செப்.17

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டையில் இந்து மக்கள் கட்சி சார்பில் வேலூர் கோட்டத்தலைவர் S.K.மோகன் தலைமையில் விநாயகர் சதுர்த்தி தினத்தை முன்னிட்டு மூன்றாவது நாளில் விநாயகர்சிலைகள் அணிவகுத்து பிரம்மாண்டமாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.







இந்த விழாவில் நடராஜ நாட்டிய பள்ளி மாணவிகள் கலைநிகழ்ச்சிகள் மற்றும் ராமபஜனைகள் நடைபெற்றது சௌடாம்பிகா டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் வெங்கடேசன் குடும்பத்தினர் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர் இந்த ஊர்வலம் வாலாஜா ஐயப்பன் கோயில் அருகில் தொடங்கி பஜார் வழியாக சென்று விசி மோட்டூர் ஏரியில் விநாயகருக்கு சிறப்பு பூஜைகள் ஆராதனைகள் செய்து சிலைகளை நீரில் கரைக்கப்பட்டன

இந்நிகழ்வில் குருஜி ஸ்ரீ முரளி சுவாமிகள், மகா பிரத்தியங்கிரா ஸ்தாபகர் மணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர் ஆன்மீக மாவட்ட பிரிவு தலைவர்கள் ஸ்ரீதர் செல்வராஜ் வரவேற்புரையாற்றினர் சமூகஊடகப்பிரிவுமாநில தலைவர் கண்ணன் ஊர்வலத்தை தொடங்கி வைத்தார் மேலும் தமிழ் மாநில காங்கிரஸ் மாவட்ட தலைவர் கார்த்திகேயன் மற்றும் நகர செயலாளர் ஒன்றிய பொறுப்பாளர்கள் இளைஞர் அணி தலைவர் செயலாளர் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் பக்தர்கள் என ஏராளமான கலந்து கொண்டனர் இதில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிபின் தலைமையிலான 500க்கும் மேற்பட்ட போலீசார், மற்றும் வாலாஜா வட்டாட்சியர்நடராஜன், அதிவிரைவு படை வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.



திண்டுக்கலில் கொலை வழக்கு தொடர்பாக 6 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்தது. திண்டுக்கல் அடுத்துள்ள அஞ்சுக்குழிப்பட்டியை சேர்ந்தவர் சந்தான கிருஷ்ணன் (53). கடந்த 2019ல் இவரது நண்பரான நத்தம் அடுத்த மேல்மலையூர் பகுதியை சேர்ந்த கருஞ்சாமி என்ற முருகன் தன்னிடம் நாக மாணிக்கக் கல் இருப்பதாகவும், ரூ.1.50 லட்சம் கொடுத்தால் வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார். இதை உண்மை என நம்பிய சந்தான கிருஷ்ணன், அவர் கேட்ட பணத்தை கொடுத்துள்ளார். அதன் பிறகு, நாக மாணிக்கக் கல் என்று சிவப்பு நிற கல்லை கொடுத்து தான் ஏமாற்றப் பட்டதை அறிந்த சந்தான கிருஷ்ணன், இது குறித்து கருஞ்சாமியிடம் கேட்டார். இதற்கு, கூடுதலாக ரூ.1.50 லட்சம் கொடுத்தால் நாக மாணிக்கக் கல் தருவதாக கூறி, திண்டுக்கல் அடுத்த வடமதுரை அருகேயுள்ள மாமரத்துப்பட்டியில் உள்ள தனது நண்பரான கரந்தன் தோட்டத்துக்கு அழைத்துள்ளார். இதையடுத்து, சந்தான கிருஷ்ணன் தனது மகன் ஹரிஹரன், அவரது நண்பர் சிவக்குமாருடன் அங்கு சென்றுள்ளார். அப்போது, வாக்குவாதம் ஏற்பட்டு, சந்தான கிருஷ்ணனுக்கு ஆதரவாக ஹரிஹரன், சிவக்குமார் ஆகியோரும், கருஞ்சாமிக்கு ஆதரவாக சின்னையா, கரந்தன், சின்னகுஞ்சு, வெள்ளைச்சாமி, பால்ராஜ் ஆகியோரும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். இதில், சிவக்குமார் கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கு திண்டுக்கல் மாவட்ட நீதி மன்றத்தில் நடைபெற்று வந்தது. இறுதி விசாரணை முடிந்து நேற்று இந்த வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. சிவக்குமாரை கொலை செய்த, கருஞ்சாமி என்ற முருகன் (42), சின்னையா (33), கரந்தன் (52), சின்னகுஞ்சு என்ற செல்லக்குஞ்சு (34), வெள்ளைச்சாமி (61), பால்ராஜ் (33) ஆகிய 6 பேருக்கும் ஆயுள் தண்டனை மற்றும் அபராதம் விதித்து முதன்மை மாவட்ட நீதிபதி பத்மநாபன் உத்தரவிட்டார்

# "சின்னமனூர் நகராட்சியில் 4 வழிகளில் குப்பைகளை தரம் பிரித்து சேகரிக்கும் பணி தீவிரம்"

## சுகாதார ஆய்வாளர் வேல்முருகன் தலைமையில் களத்தில் இறங்கிய தூய்மைப் பணியாளர்கள்

தேனி,செப்.17

தேனி மாவட்டம், சின்னமனூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி குப்பைகளை தரம் பிரித்து சேகரிக்கும் விழிப்புணர்வு மற்றும் சேகரிப்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.





தமிழக அரசின் நகராட்சி நிர்வாக இயக்ககத்தின் (DMA) அறிவுறுத்தலின் படி, வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகளை 4 வழிகளில் தரம் பிரித்து வழங்க வேண்டும்.

அதன்படி மக்கக்கூடிய ஈரக்கழிவு, மறுசுழற்சி செய்யக்கூடிய உலர்கழிவு, நாப்கின் மற்றும் முகக்கவசம் உள்ளிட்ட சுகாதாரக்கழிவு மற்றும் மின்சார உபகரணங்கள் போன்ற சிறப்பு பாதுகாப்பு கழிவுகள் என தனித்தனியாக பிரித்து வழங்கும் முறை அமல்படுத்தப் பட்டுள்ளது.

சின்னமனூர் நகராட்சி சுகாதார ஆய்வாளர் (S.I.) திரு. வேல்முருகன் அவர்கள் தலைமையில், நகராட்சி தூய்மைப் பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று மக்களிடம் குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணியை நேரில் நின்று மேற்கொண்டு வருகின்றனர்.

தூய்மைப் பணியாளர்களின்

இந்த நேரடி ஈடுபாட்டால் பொதுமக்களிடையேயும் விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது.

இது குறித்து நகராட்சி நிர்வாகம் சார்பில் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பில், "சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், நகரை தூய்மையாக வைத்திருக்கவும் பொதுமக்கள் தங்கள் வீடுகளில் உருவாகும் குப்பைகளை கட்டாயம் 4 வழிகளில் தரம் பிரித்தே தூய்மைப் பணியாளர்களிடம் வழங்க வேண்டும்.

இவ்வாறு தரம் பிரித்து வழங்காத வீடுகளில் இருந்து குப்பைகள் பெறப் படமாட்டாது.

எனவே, பொதுமக்கள் நகராட்சி நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்," என்று நகராட்சி ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ராணிப்பேட்டை முத்து கடையில் அ இ அ தி மு க சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்



அ இ அ தி மு க சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் ராணிப்பேட்டை முத்து கடையில் நடைபெற்றது.

ராணிப்பேட்டை நகரக் கழகச் செயலாளர் கே பி சந்தோஷ் அவர்கள்தலைமை தாங்கினார் வாலாஜா கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பூண்டி பிரகாஷ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். ராணிப்பேட்டை மேற்கு மாவட்ட கழக செயலாளர் சுமைதாங்கி ஏழுமலை அவர்கள் சிறப்புரை ஆற்றினார் புரட்சித் தலைவர் ஆட்சியில் சத்துணவு தந்த சரித்திர நாயகன் குழந்தைகளின் கல்விக்காக ஒருவேளை உணவுக்காக குழந்தைகள் வந்து கல்வி கற்பார்கள் என்ற ஒரே காரணத்திற்காக சத்துணவு திட்டத்தை உருவாக்கினார். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெண்களுக்கு தேவையான உதவிகளும் பொது மக்களுக்கு தேவையானஉதவிகளும் செய்தார் புரட்சித் தமிழர் அரசு பள்ளியில் படிக்கின்ற குழந்தைகள் மருத்துவர்கள் ஆக வேண்டும் என்பதற்காக 7.5% வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார் இதுபோல் பல திட்டங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் நிறைவேற்றப் பட்டு இருக்கின்றது.

இந்த ஆட்சியில்பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று பேசினார். நிகழ்ச்சியில் மாநில மாவட்ட பொறுப்பாளர்கள் நகர ஒன்றிய பேரூராட்சி கழக செயலாளர் கிளை கழக செயலாளர்கள் தொண்டர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முடிவில் நகர அம்மா பேரவை செயலாளர் அப்பு என்கிற சந்திரசேகர் நன்றியுரை வழங்கினார்

# இளைஞர் நீதிக் குழுமத்தில் 2 தற்காலிக பணியிடங்கள்: மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு - செப்.29க்குள் விண்ணப்பிக்கலாம்

திருவண்ணாமலை, செப்.17

திருவண்ணாமலை மாவட்டத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் செயல்பட்டு வரும் இளைஞர் நீதிக் குழுமத்திற்கு கூடுதலாக இளநிலை உதவியாளர் மற்றும் பதிவேடு எழுத்தர் – 1, அலுவலக உதவியாளர்–1 என 2 பணியிடங்களுக்கு முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிய தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

இளநிலை உதவியாளர் உடன் இணைந்த பதிவேடு எழுத்தர் பணியிடத்திற்கு, மாநில அல்லது மத்திய வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கணினித் திறன் பெற்றிருக்க வேண்டும். வயது 42க்கு மிகாமல் இருக்க வேண்டும். இப்பணியிடத்திற்கு மாதம் ரூ.20,000 தொகுப்பூதியம் வழங்கப்படும்.

அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு, அரசு அல்லது தனியார் பள்ளி வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது 42க்கு மிகாமல் இருக்க வேண்டும். இப்பணியிடத்திற்கு மாதம் ரூ.13,000 தொகுப்பூதியம் வழங்கப்படும்.

மேற்கண்ட பணியிடங்கள் முற்றிலும் தற்காலிகமானவை. நிர்வாக காரணங்களுக்காக எவ்வித முன்னறிவிப்புமின்றி பணியாளர்களை பணிநீக்கம் செய்ய நிர்வாகத்திற்கு அதிகாரம் உள்ளது. பணியிலிருந்து நீக்கப்பட்டால், அப்பணியிடத்தை அடிப்படையாகக் கொண்டு எவ்வித உரிமை கோரலும் செய்ய முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியானவர்கள்பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சுயசான்றொப்பமிட்ட கல்விச் சான்றிதழ் நகல்களை இணைத்து 29.09.2026 அன்று மாலை 5.45 மணிக்குள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்க வேண்டும். காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள், முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் உரிய ஆவணங்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பங்களை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், தாலுக்கா அலுவலக வளாகம், திருவண்ணா மலை–606 601 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் விவரங்களுக்கு 04175–223030, 6382614143, 6382614197 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்புகொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

# எரியோடு அருகே நூர் பாலை தொழிலாளர்களை ஏற்றி வந்த வேன் மினி பஸ் மோதி விபத்து



திண்டுக்கல், செப்.17

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே இ.சித்தூர் ஊராட்சி கரிசல்பட்டி அருகே உள்ள குளத்துக்கரையில் எரியோட்டில் இருந்து வேடசந்தூருக்கு சென்ற மினி பஸ்ஸும், எரியோடு நோக்கி சென்ற நூற்பாலை வேனும் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது.

வேன் டிரைவர் வேல்முருகன் படுகாயம் அடைந்தார் நூற்பாலை தொழிலாளர்கள் சிறு சிறு காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தனர்

மேற்படி சம்பவம் குறித்து எரியோடு போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்







உலக ஓசோன் தினத்தை முன்னிட்டு கொடைக்கானல் அரசு மேல்நிலை பள்ளியில் ஓசோன் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியை, பள்ளி தலைமையாசிரியர் சுதா தலைமை வகித்து, தொடங்கி வைத்தார். ஆசிரியர்கள் ஐரின், விஜயா ஆகியோர் ஓசோன் மண்டலம், அதன் பயன்பாடு, ஓசோன் மற்றும் சுற்றுப்புற சூழலை பாதுகாப்பதில் மாணவர்களின் பங்கு குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். தொடர்ந்து, ஓசோன் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. அப்போது, ஓசோன் படலத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது. இதில், மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை, தேசிய பசுமை படை மற்றும் நாட்டு நல பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஷீபா, விஜயா ஆகியோர் செய்தனர்.

# தேனி வருசநாடு அருகே குடிநீர் பிரச்சினை: காலி குடங்களுடன் மக்கள் மறியல்

மூலவைகை உருவாகும் கிராமத்தில் குடிநீர் பிரச்சினை அதிகரித்துள்ளது. இப்பிரச்சினையை சரி செய்ய கோரி வருசநாடு அருகே காலிக் குடங்களுடன் பெண்கள் இன்று சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.



ஆண்டிபட்டி வட்டம் தங்கம்மாள்புரம் கிராமத்தில் 1,000க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு மூலவைகை கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தண்ணீர் வழங்கப் பட்டு வருகிறது.

இந்நிலையில், ஆறு வறண்டதால் உறை கிணறுகளில் நீர் சுரப்பு குறைந்து நீர் தட்டுப்பாடு ஏற்படத் தொடங்கியது. இதனால் 2 வாரங்களுக்கு மேல் குடிநீர்விநியோகத்தில்பாதிப்பு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து இன்று காலையில் (செப்.16) வருசநாடு தேனி சாலையில் இக்கிராம மக்கள் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் பள்ளி, கல்லூரி உள்ளிட்ட பல வாகனங்களும் நீண்ட வரிசையில் காத்திருந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இதனிடையே, தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த கடமலைக்குண்டு காவல் துறையினர் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள் மறியலில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அப்போது, “ஆறு வறண்டதால் தற்போது நீர்வரத்து குறைந்தது. கடைகள், வணிக நிறுவனங்களுக்கு கூடுதல் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதால் கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து வரும் குறைவான நீரும் குடியிருப்பு பகுதிகளுக்கு வருவதில்லை. குடிநீர் திறந்து விடும் பணியாளர்களும் அலட்சியமாக பதில் கூறுகின்றனர்” என்று குற்றம்சாட்டினர். விரைவில் சரிசெய்யப்படும் என்று அதிகாரிகள் உறுதி அளித்ததை தொடர்ந்து கிராம மக்கள் போராட்டத்தைகைவிட்டுகலைந்து சென்றனர். போராட்டம் காரணமாக ஒரு மணி நேரத்துக்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# திருவண்ணாமலையில் களமிறங்கிய கலெக்டர் வந்தனா கார்க்: வளர்ச்சிப்பணிகள் முதல் மழைக்கால முன்னெச்சரிக்கை வரை அதிரடி ஆய்வு

## 112 பேருக்கு ரூ.19.73 லட்சம் நலத்திட்ட உதவிகள்

திருவண்ணாமலை, செப். 17

"உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை வட்டாரத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள், அடிப்படை வசதிகள் மற்றும் அரசின் நலத்திட்ட செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பருவமழையை முன்னிட்டு மழைநீர் தேங்காமல் வெளியேறுவதற்கான வடிகால் வசதிகள், ஏரிகள் மற்றும் கால்வாய்களின் நிலை, பொதுமக்களுக்கான சுகாதார வசதிகள், திடக்கழிவு மேலாண்மை, அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள், அரசு திட்டப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்ட அவர், பணிகளை தரமாகவும் விரைவாகவும் மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

திருவண்ணாமலை மாநகராட்சி வேங்கிக்கால் ஏரியில் ஆய்வு செய்த வந்தனா கார்க், பருவமழை முன்னேற்பாடு பணிகள், ஏரி சீரமைப்பு மற்றும் ஏரியில் இருந்து வெளியேறும் மழைநீர் செல்லும் வடிகால் வசதிகளை பார்வையிட்டார். வேங்கிக்கால் ஜெய்பீம் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் ஏரி உபரிநீர் செல்லும் கால்வாய்களையும் ஆய்வு செய்து, மழைக்காலத்தில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மழைநீர் தடையின்றி வெளியேற தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள உத்தரவிட்டார். வேங்கிக்கால் அறிவியல் பூங்காவில் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளை ஆய்வு செய்த அவர், பூங்காவை தூய்மையாக பராமரிப்பதுடன், குழந்தைகள் விளையாடும் பகுதிகள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்களை முறையாக பராமரிக்க வேண்டும் என்றும், அதற்கான மதிப்பீட்டு அறிக்கையை தயாரிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். சாலை விரிவாக்கப் பணியின்போது சேதமடைந்த பூங்கா சுற்றுச்சுவரை நெடுஞ்சாலைத்துறை மூலம் சீரமைக்கவும் உத்தரவிட்டார்.

திருவண்ணாமலை மாநகராட்சி பழைய பேருந்து நிலையம் பின்புறம் உள்ள அரசுசுகாதாரநிலையத்தில் பொது சிகிச்சைப் பிரிவு, பிரசவ அறை மற்றும் மருந்தகம் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்தார். மருந்துகளின் இருப்பு மற்றும் பதிவேடுகளை பார்வையிட்டதுடன், சிகிச்சைக்காக வந்த பொதுமக்களிடம் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் கனிவாக அணுகுகிறார்களா என்பதையும் கேட்டறிந்தார்.

காந்தி நகரில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொடங்கி வைத்த மாவட்ட ஆட்சித்தலைவர், மக்கும் கழிவு, மக்காத கழிவு, சுகாதாரக் கழிவு மற்றும் சிறப்பு



வகை கழிவு என நான்கு வகையாக குப்பைகளை தரம் பிரித்து தூய்மைப் பணியாளர்களிடம் வழங்க வேண்டியதன் அவசியத்தை பொதுமக்களுக்கு விளக்கினார். நெகிழிப் பயன்பாட்டை தவிர்த்து துணிப்பைகளை பயன்படுத்தவும், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் நோய் பரவலைத் தடுக்கவும் அவர் அறிவுறுத்தினார். தொடர்ந்து பொதுமக்களுக்கு குப்பைகளைதரம் பிரித்து சேகரிப்பதற்கான குப்பைத் தொட்டிகளையும் வழங்கினார். காந்தி நகர் பகுதியில் இருந்து பெரிய ஏரிக்கு செல்லும் கால்வாயில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளையும் அவர் ஆய்வு செய்தார். வேட்டவலம் சாலை, தமிழ் மின் நகர், சுப்பிரமணியம் நகர், பண்டார குளம், தியாகி அண்ணாமலை நகர் மற்றும் காந்தி நகர் உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் தடையின்றி செல்லும் வகையில் கால்வாய்களை தூர்வாரி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். திருமஞ்சன கோபுரம் அருகே உள்ள அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் வருகைப் பதிவேடு, எடை மற்றும் உயரம் குறித்தவிவரங்கள், அவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

கலைஞர் கருணாநிதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி எதிரே தோட்டக்கலைத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள தோட்டக்கலைப் பூங்காவையும் பார்வையிட்ட அவர், அதன் பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். தொடர்ந்து தோட்டக்கலைத்துறை மூலம் உற்பத்தி செய்யப்படும் தேன், உர வகைகள், மரக்கன்றுகள் மற்றும் செடி வகைகளை விற்பனை செய்வதற்கான தோட்டக்கலை விற்பனையகத்தை தொடங்கி வைத்தார். அத்தியந்தல் பகுதியில் ரூ.53 கோடி மதிப்பீட்டில் 55,800 சதுர அடி பரப்பளவில் இரு தளங்களுடன் கட்டப்பட்டு வரும் தமிழ்ப் பண்பாட்டு மையப் பணிகளையும் அவர் ஆய்வு செய்தார். பண்டைய தமிழர் பண்பாடு மற்றும் தமிழ்நாட்டின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டு வரும் இப்பணிகளை தரமாகவும் விரைவாகவும் முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மணலூர்பேட்டை சாலையில் ரூ.105 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (UGSS) பணிகளையும் பார்வையிட்டு, பருவமழைக்கு முன்பாக மேற்கொள்ள வேண்டிய பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டார். அதே பகுதியில் உள்ள ரவுண்டானாக்களை ஆய்வு செய்து, அவற்றை முறையாக பராமரிப்பதுடன் பூச்செடிகளை நட்டு அழகுபடுத்தவும் அறிவுறுத்தினார்.

எடப்பாளையம் மு.க.ஸ்டாலின் பூங்காவில் ஏரியில் படகு சவாரி தளம் அமைப்பதற்கான பணிகளை பார்வையிட்ட அவர், படகு சவாரி திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். அழகானந்தல் ஊராட்சியில் ரூ.5.50 லட்சம் மதிப்பீட்டில் விபிஜி ராம்ஜி திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும்நீர்த்தேக்கக்குட்டை அமைக்கும் பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு செய்தார். அங்கு பணியாற்றும் பொதுமக்களின் எண்ணிக்கை, மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை மற்றும் வருகைப் பதிவேடு உள்ளிட்ட விவரங்களை சரிபார்த்து, பணிகளை முறையாக மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

அழகானந்தல் நியாய விலைக் கடையில் பொருட்களின் இருப்பு, தரம் மற்றும் முறையான விநியோகம் குறித்து ஆய்வு செய்ததுடன், பொருட்கள் வழங்கிய விவரங்கள் பதிவேட்டில் முறையாக பதிவு செய்யப்படுகிறதா என்பதையும் சரிபார்த்தார்.

அழகானந்தல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணவர்களின் கற்றல் திறனை ஆய்வு செய்த வந்தனா கார்க், பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெற்ற வட்டார அளவிலான செஸ் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். பள்ளி சமையல் கூடத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம், பொருட்களின் இருப்பு மற்றும் சமையல் கூடத்தின் சுகாதார நிலை குறித்தும் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்ட நிகழ்ச்சியில் 112 பயனாளிகளுக்கு ரூ.19 லட்சத்து 72 ஆயிரத்து 995 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இதில் வருவாய்த்துறை சார்பில் 20 பேருக்கு வீட்டுமனை பட்டா ஆணைகள், 9 பேருக்கு முழுப்புலம்பட்டாபெயர் மாற்ற ஆணைகள், 30 பேருக்கு உட்பிரிவு பட்டா மாறுதல் ஆணைகள், 20 பேருக்கு ஈமச்சடங்கு மற்றும் இயற்கை மரண நிதியுதவி, 20 பேருக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள், ஒருவருக்கு இருளர் சாதிச் சான்றிதழ் மற்றும் 6 பேருக்கு ஆதரவற்ற விதவைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

வேளாண்மைத்துறை சார்பில் 3 பேருக்கும், தோட்டக்கலைத்துறை சார்பில் 2 பேருக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும் பொதுமக்களிடமிருந்து 114 மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து அவரது தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கள ஆய்வின் போது கண்டறியப்பட்ட குறைகள் மற்றும் பொதுமக்கள் அளித்த மனுக்கள் மீதுவிரைந்துநடவடிக்கை எடுத்து தீர்வு காண வேண்டும் என துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் சிவசுப்பிரமணியன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனிராஜ், வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) தி.மலர்விழி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நல அலுவலர்செந்தில் குமரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மதுசெழியன், திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையர் பாலசுப்பிரமணியன், நீர்வளத்துறை செயற்பொறியாளர் அறிவழகன், குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் ஏஞ்சலின் சிந்தியா ராணி, வட்டாட்சியர் மோகன்ராமன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாமில் ஆற்காடு ஊராட்சி ஒன்றியம் கரிக்கந்தாங்கல் ஊராட்சியில் திடக்கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்கும் மையத்தின் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன் வருவாய் கோட்டாட்சியர் ராஜி மற்றும் பலர் உள்ளனர்.

### மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு:

# 19ம் தேதி குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறப்பு eKYC முகாம்

## 1.11 லட்சம் பேர் புதுப்பிக்க வேண்டுகோள்

திருவண்ணாமலை, செப்.17

திருவண்ணாமலை மாவட்டத்தில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம்–2013ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அனைத்து குடும்ப அட்டைகளிலும் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களின் ஆதார் விவரங்களை உறுதிப்படுத்தும் வகையில், விரல் ரேகை அடிப்படையிலான eKYC பதிவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் இது வரை 95.23 சதவீதம் eKYC பணிகள் நிறைவடைந்துள்ளன. இன்னும் 1,11,237 பேர் கைரேகை மூலம் eKYC புதுப்பிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

எனவே, eKYC புதுப்பிக்காத குடும்ப அட்டைதாரர்கள் தங்களது குடும்ப அட்டையுடன் அருகிலுள்ள நியாய விலைக் கடைக்குச் சென்று கைரேகை பதிவு செய்து eKYCஐ புதுப்பித்துக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. கைரேகை பதிவு ஆகாதவர்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்கள் தங்களது ஆதார் அட்டையில் விரல் ரேகை மற்றும் கண் பதிவை முதலில் புதுப்பித்த பின்னரே eKYCல் பதிவு செய்ய முடியும். இதற்காக சம்பந்தப்பட்ட வட்டங்களில் உள்ள ஆதார் மையங்களை அணுகி ஆதார் விவரங்களைப் புதுப்பித்த பின்னர், குடும்ப அட்டையுடன் நியாய விலைக் கடைக்குச் சென்று eKYC பதிவு செய்ய வேண்டும்.

இதற்காக ஏற்கனவே 02.08.2026, 08.08.2026, 09.08.2026 மற்றும் 29.08.2026 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. இதில் விடுபட்டவர்களுக்காக 19.09.2026 சனிக்கிழமை சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. எனவே, இது வரைeKYC பதிவு செய்யாத குடும்ப அட்டை உறுப்பினர்கள் வரும் 19ம் தேதி நடைபெறும் சிறப்பு முகாமில் கலந்து கொண்டு eKYC பதிவை புதுப்பித்து பயன்பெறுமாறு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

**பழனி டி.ஆர்.இ.யூ. ரெயில்வே தொழிற்சங்கத்தின் சார்பில் ரெயில்நிலையம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கு கிளை உதவி தலைவர் கணேசன் தலைமை தாங்கினார். கிளை செயலாளர் பிரதாப் முன்னிலை வகித்தனர். மதுரை கோட்ட செயலாளர் கார்த்திக் சங்கிலி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். ஆர்ப்பாட்டத்தின்போது, போனஸ் உச்சவரம்பை ரத்து செய்ய வேண்டும், நிதி பற்றாக்குறை என்று அலவன்சை நிறுத்தக்கூடாது, மங்களூரு ரெயில்நிலையத்தை தெற்கு ரெயில்வேயில் இருந்து பிரிக்க கூடாது என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் சங்க நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.**





# கிராண்ட்லைன் ஊராட்சி கிருஷ்ணா நகரில் விநாயகர் சதுர்த்தி விழா

செங்குன்றம், செப்டம்பர் 17:

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் கிராண்ட்லையன் ஊராட்சி கிருஷ்ணா நகர் இளைஞரணி சார்பில் 10ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா ஆன்மீக சேவகர் பா.மணி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கற்பக விநாயகர் சுமார் 10 அடி உயரம் உள்ள சிலையை வைத்து கணபதி ஹோமத்துடன் பல்வேறு சிறப்பு பூஜைகள் செய்து மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் உபயதாரர்கள் சார்பில் மூன்று வேளையும் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் கிருஷ்ணா நகர் இளைஞரணி நிர்வாகிகள், சுற்றுவட்டார பக்தர்கள், பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.

# ஒரு மாதமாக முடங்கிய யூனியன் வங்கி ஏடிஎம்: பணம் எடுக்க முடியாமல் நோயாளிகள், பொதுமக்கள் தவிப்பு

## அதிகாரிகள் அலட்சியத்துக்கு கடும் எதிர்ப்பு

சேத்துப்பட்டு:செப்.17

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு நிர்மலா நகரில் தனியார் மருத்துவமனை அருகே அமைந்துள்ள யூனியன் வங்கி ஏடிஎம், கடந்த ஒரு மாதமாக "தற்காலிகமாக சேவையில் இல்லை" என்ற அறிவிப்புடன் செயல்படாமல் கிடப்பதால், மருத்துவ சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் முதல் பொதுமக்கள் வரை கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

நிர்மலா நகர் பகுதியில் பொதுமக்கள் அதிகளவில் பயன்படுத்தி வந்த இந்த ஏடிஎம் திடீரென பழுதடைந்த நிலையில், இது வரை சீரமைக்கப்படவில்லை எனகூறப்படுகிறது. ஒரு மாதத்திற்கும் மேலாக சேவை முடங்கியுள்ளதால், அவசரமாக பணம் தேவைப்படும் பொதுமக்கள் மற்றும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் பணம் எடுக்க முடியாமல் வேறு பகுதிகளில் உள்ள ஏடிஎம்களை தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.




குறிப்பாக மருத்துவமனை அருகிலேயே ஏடிஎம் அமைந்திருந்ததால், சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் மற்றும் அவர்களுடன் வரும் உறவினர்களுக்கு இது பெரும் பயனுள்ளதாக இருந்து வந்தது. தற்போது ஏடிஎம் செயல்படாததால், அவசர மருத்துவச் செலவுகளுக்குக்கூட பணம் எடுக்க முடியாமல் பொதுமக்கள் சிரமப்படுவதாக தெரிவிக்கின்றனர். "தற்காலிகமாக சேவையில் இல்லை" என்ற அறிவிப்பு மட்டும் தொடர்ந்து வைக்கப்பட்டுள்ள நிலையில், பழுது ஏற்பட்டதற்கான காரணம் மற்றும் எப்போது சேவை மீண்டும் தொடங்கும் என்பது குறித்து தெளிவான தகவல் இல்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

ஒரு மாதமாக ஏடிஎம் சேவை முடங்கியுள்ள நிலையில், வங்கி அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து பழுதை சரிசெய்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

மருத்துவமனைஅருகே அமைந்துள்ள முக்கிய ஏடிஎம் என்பதால், பொதுமக்களின் அவசரத் தேவையை கருத்தில் கொண்டு இனியும் காலதாமதம் செய்யாமல் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், வங்கி நிர்வாகத்தின் அலட்சியப் போக்குக்கு முற்றுப்புள்ளி வைத்து தடையற்ற ஏடிஎம் சேவையை உறுதி செய்ய வேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.





கன்னியாகுமரி மாவட்டஆட்சித் தலைவர் பிரதாப் இ .ஆ,ப நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையம் பக்கத்தில் உள்ள காமராஜர் கட்டிடத்தில் இயங்கி வரும் கோ .அப்டேக்ஸ் அங்கன்வாடியில் தீபாவளிக்கான துணிதள்ளுபடி விற்பனையை வாடிக்கையாளருக்கு வழங்கி துவக்கி வைத்தார் ,

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA